செ.வெ.எண்:41 நாள்:30.11.2020

# பத்திரிக்கைச் செய்தி.

அரியலூர் மாவட்டத்தில் 2020 –2021நிதிஆண்டில் திறந்தவெளிகிணறுகள் மற்றும் ஆழ்குழாய் கிணறுகளில் சூரியசக்தியால் இயங்கும் மோட்டார் பம்புகள் அமைப்பதற்கு 70% அரசு மானியத்தில் சூரியசக்தியால் இயங்கும் பம்புசெட்டுகள் வழங்கப்பட உள்ளதாக அரியலூர் மாவட்டஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

மத்திய அரசின் பிரதம மந்திரியின் விவசாயிகளுக்கான எரிசக்தி பாதுகாப்பு மற்றும் வாழ்வதாரத்தை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் (PM - KUSUM) வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் விவசாயப் பயன்பாட்டிற்கான திறந்தவெளி கிணறுகள் மற்றும் ஆழ்துளைக் கிணறுகளில் சூரியசக்தியில் இயங்கும் பம்ப்செட்களை 70 சதவீதமானியத்தில் அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. நடப்பு 2020-21ம் ஆண்டில் அரியலூர் மாவட்டத்திற்கு 410 சோலார் பம்ப்செட்கள் அமைப்பதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது

இத்திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கு 5 Hp முதல் 10 Hp வரைசோலார் பம்ப்செட் அமைத்துத் தரப்படும். 5 Hp சோலார் பம்ப் செட்டு அமைக்க அதிகபட்சமாக தொகைரூ. 2,42,303/- 7.5 Hp சோலார் பம்ப் செட்டுஅமைக்க அதிகபட்சமாக தொகைரூ. 3,67,525/- மற்றும் 10 Hp சோலார் பம்ப் செட்டு அமைக்க அதிகபட்சமாக தொகை ரூ.4,39,629/- செலவாகும். இதில் 70 சதவீததொகை அரசு மானியமாக வழங்கப்படும்.

ஏற்கனவே,தமிழ்நாடுமின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் இலவச மின் இணைப்பு வேண்டி விண்ணப்பித்துள்ள விவசாயிகள் அவர்களுடைய மூதுரிமையை துறக்க வேண்டிய அவசியம் இல்லை. தங்களுக்குரிய இலவசமின் இணைப்பு முறை வரும்பொழுது சூரியசக்தியால் இயங்கும் பம்புசெட்டுகளை மின் கட்டமைப்புடன் இணைப்பதற்கான சம்மத கடிதத்தினை சம்பந்தப்பட்ட உதவிசெயற்பொறியாளர்,வேளாண்மைப் பொறியியல் துறை அலுவலகத்தில் வழங்கவேண்டும். இதுவரை இலவசமின் இணைப்பு வேண்டி தமிழ்நாடுமின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் விண்ணப்பிக்காத விவசாயிகள் புதிதாக பதியவேண்டிய அவசியமில்லை. சூரியசக்தியால் இயங்கும் மோட்டார் பம்புசெட்டுகளை அமைத்திட விண்ணப்பிக்கும் போது நுண்ணீர் பாசன அமைப்புடன் இணைத்திட உறுதிமொழி அளித்திடவேண்டும்.

இத்திட்டத்தில் பயன்பெற விருப்பமுள்ள விவசாயிகள் வேளாண்மைப்பொறியியல் துறை, உதவிசெயற்பொறியாளர்(வே.பொ) அரியலூர் மற்றும் உதவி செயற்பொறியாளர்(வே.பொ) ஜெயங்கொண்டம் அலுவலகத்தில் தொடர்பு கொண்டு விண்ணப்பங்களை அளித்து பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**